**அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு தர நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 35(5)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் நிதிக் கூற்றின் மூலம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமையதொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக் கணக்கின் மீதி ரூபா. 375,154 பெறுமதியினால் குறைவாகவும், பெறுமதி சேர் வரி கணக்கின் மீதி ரூபா. 374,942 ஆகவும் மற்றும் பரீட்சைக் கட்டண வருமான கணக்கு ரூபா.166 இனாலும் குறைவடைந்து நிதிக் கூற்றில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பில் நிலையான வைப்புக் கணக்கு மீதியாக காட்டப்பட்டுள்ளது சரியானது என ஏற்றுக்கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவினூடாக இத் தவறுகள் சீர் செய்யப்படும் என்பதனை அறிவிக்கின்றேன். 2021 ஆம் ஆண்டில் VAT கட்டுப்பாட்டு கணக்கினை சரிசெய்வதற்கு | கொடுக்கல் வாங்கல்கள் சரியான முறையில் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும். மற்றும் ரூபா.166 பெறுமதியான பரீட்சை கட்டண வருமானத்தினை மாற்றி 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவினூடாக இத் தவறுகள் சரிசெய்யப்படும். | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 4,517,706 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படடுள்ளதாக கணக்கில் காட்டப்பட்டிருந்தது மற்றும் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வாக ரூபா. 451,770 பெறுமதியானது மேலதிகமாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு விசாரணை சரியானது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டில் இத் தவறினை நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும் என்பதனை தெரிவிக்கின்றேன். | சொத்துக்கள் கொள்வனவு செய்யபட்ட ஆண்டிலேயே கணக்கில் காட்டப்பட வேண்டும். மற்றும் பெறுமானத்தேய்வுகள் சரியாக கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | கட்டட நிர்மாண வேலைக்கான ஆலோசனைக் கட்டணம் ரூபா.1,662,285 பெறுமதியானது கடந்த வருடம் வெளியிடப்பட்டதில் காட்டப்பட்டிருந்த போதிலும் அச்செலவினம் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | இக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆலோசனை கட்டணம் ரூபா.1,662,285 பெறுமதியானது 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பின் ஊடாக சரி செய்யப்பட்டும் என்பதனை தெரிவிக்கின்றேன். | முன்னைய ஆண்டின் நிதிநிலைமைக் கூற்றில் செய்யப்பட்ட தவறுகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பெறுமதி சேர் வரி கணக்கிற்கான செலவினம் ரூபா.28,208,343 ஆக காணப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா. 27,950,538 பெறுமதியாக பதிவுசெய்யப்பட்டிருந்தன. | பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டு கணக்கிற்கமைய ரூபா.28,208,343 பெறுமதியானது பெறுமதி சேர் வரியாக செலுத்தப்பட்டுள்ளதாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா.27,950,538 ஆக தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினத்திற்கான கொடுப்பனவு ரூபா. 135,309 பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு விசாரணை சரியானது என ஏற்றுக்கொள்கின்றேன். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

| | அவதானிப்புக்கள் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவு | வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் சரிபார்க்கப்பட வேண்டிய போதிலும், அந்த அனைத்து உபகரணங்களும் சரிபார்க்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எல்லாப் மாவட்ட காரியாலயங்களிலும் வருடாந்தம வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரணங்கள் சரிபார்க்கப்படுகின்றது என்பதுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் காரியலாயத்தின் சரிபார்க்கப்படும் அளவீட்டு உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எல்லா மாவட்டங்களிலும் தயாரிக்கப்படும் விபரக் கோவைகள் பிரதான காரியலயத்தின் விபரக்கோவையுடன் ஒன்றிணைக்கப்படும். 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட கொரோன தொற்று நோய் காரணமாக இத் தகவல் கோவைகள் உரிய எமுறையில் உரிய காலத்தில் சரிபார்க்க முடியாமையினால் மற்றும் இதன் காரணமாக உரிய முறையில் அளவீட்டு உபகரணங்களை சரிபார்க்க முடியவில்லை. எனினும் எதிர் வரும் காலத்தில் தகவல் கோவைகளை சரியான முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் சரிபார்க்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 மே திகதிய PFD/RED/01/04/2015/01, அரச நிதி | வழங்கப்பட்ட இடைக்கால சுற்றிக்கைக்கமைய உரிய வேலைகள் நிறைவடைந்தவுடன் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட | இவ்வாறு அறவிடப்படாத எரிபொருள் முற்பணக்கொடுப்பனவு களுத்துறை மாவட்டத்தின் | சுற்றிக்கைகள் விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை இலக்கம் 03/2015 அலிருந்தும் திருத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 371(2)(ஆ) | வேண்டிய போதிலும் 2020பெப்ரவரி 07 ஆம் திகதியில் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 20,000 பெறுமதியான எரிபொருக்கான முற்பணத் தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காரியாலயத்திற்கு வழங்கப்பட்ட முற்பண எரிபொருள் கொடுப்பனவாகும். இவ்வாறு முற்பணங்கள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் 2020 நவம்பர் மாதம் தொடக்கம் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இதனால் அறவிடப்பட வேண்டிய முற்பணகங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 99,436,023 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 117,656,728 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 18,220,705 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.இந்த நிதிக் குறைபாட்டிற்கு முக்கியமான காரணமாக சீல் வருமானம், மாதிரிகளை அனுமதி பெறுதல் தொடர்பான வருமானம், வட்டி வருமானம், உட்பட மொத்த வருமானம் ரூபா. 17,535,036 வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியின் நடைமுறைக்கணக்கின் மீளாய்வாண்டின் சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை ரூபா. 219 மில்லியன் தொடக்கம் ரூபா. 426 மில்லியன் வரையான வேறுபாடுகளுடன் மீதி பேணப்பட்டு வந்த போதிலும் இந்த நிதியில் மாதாந்த தேவையுடன் ஒபிடுகையில் 80% இற்கு அதிகமாக காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக மீதியினை மூதலீடு செய்வதன் மூலம் நிதியத்திற்கு தேவையான வட்டி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய போதிலும் முகாமைத்துவத்தினால் இது தொடர்பாக அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தில் காணப்படும் நடைமுறைக் கணக்கின் மீதியினை சாதாரண சேமிப்பு கணக்குக்கு மாற்றுவதன் மூலம் நிதி முகாமைத்துவப்படுத்தப்பட்டு ள்ளது. இதன் படி 2020 யூன் 29 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்ட சாதாரண சேமிப்பு கணக்கில் இற்றை வரை ரூபா. 150 மில்லியன் காணப்படுகின்றது என்பதுடன் 2021 பெப்ரவரி 25 ஆம் திகதியில் வட்டி வருமானமாக ரூபா.2,185,098 பெறப்பட்டிருந்தது. | நடைமுறைக் கணக்கின் மேலதிக மீதியினை முதலீடு செய்வதன் மூலம் வட்டி வருமானத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தொடர்ச்சியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை திணைக்களத்தினால் நடைபெற்றிருக்காமையால் நிதியின் செயல்பாடுகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டபடி 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் இரண்டு(02) கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் நாட்டில் கொரோனா தொற்றுநோய் காரணமாக, மக்கள் ஒன்றுகூடுவது தடைசெய்யப்பட்டதால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டங்களை நடத்த முடியவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் திட்டமிட்டபடி நடத்தப்பட வேண்டும். |